திருவள்ளூர் தொகுதி திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட 12வது வார்டு பத்தியால் பேட்டை பகுதியில் அதிமுக ஆட்சியில் கிடப்பில் இருந்த வீட்டுமனை பட்டாக்களை ஆவடியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 40 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கியதற்கு 12 வார்டு கவுன்சிலர் ஜி.ஆர்.ராஜ்குமார்தாமஸ் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் நேரில் சந்தித்து தமிழ்நாடு முதல்வருக்கும் துணை முதல்வருக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தார்கள் அருகில் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ப.சிட்டிபாபு, டி.மோதிலால், பொன். பாண்டியன், தி.ஆ.கமலக்கண்ணன், என்.அன்பு, மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

மும்பை திமுக சார்பில் தாராவி கலைஞர் மாளிகையில் மாநில திமுக இளைஞரணி செயலாளர், தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. மும்பை திமுக பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மும்பை இலெமுரியா அறக்கட்டளையின் நிறுவுனர் மானமிகு சு.குமணராசன் அவர்கள் கழகக்கொடியேற்றி, பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள் வழங்கினார்.

முனைவேர் சான்றிதழ் படிப்பினை தங்கி பயில

ரூ. 2 .34 கோடி மதிப்பில் கட்டப்பட்ட தங்கும் விடுதி!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார்!

சென்னை,டிச.4-

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறையின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நேற்று (3.12.2025) நடைபெற்ற விழாவில் தொழில் முனைவோர் சான்றிதழ் படிப்பினை தங்கி பயில ரூ. 2.34 கோடி மதிப்பில் கட்டப்பட்ட தங்கும் விடுதியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து பேசிய தாவது:

தமிழ்நாடு அரசின் EDII நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் சான்றிதழ் படிப்பில் 120 தொழில் முனைவோர் தங்கி பயிலும் வகையில் ரூ. 2 கோடியே 34 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட தங்கும் விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் புத்தாக்க பற்று சீட்டு திட்டத்தின் கீழ் 20 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ. 35 லட்சத்து 63 ஆயிரம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. EDII நிறுவனத்தின் மூலம் பயிற்சி பெற்று தொழில் முனைவோர்களாக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ள 5 பெண் தொழில் முனைவோர்களுக்கு விருதுகளும் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2001 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் - EDII தனது 25 ஆண்டு கால சேவையினை நிறைவு செய்து வெள்ளி விழா கண்டுள்ளது. நிறுவனத்தின் இயக்குநர், அலுவலர்கள், பணியாளர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட "பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம்" கல்லூரி மாணவர்களுக்கு "நிமிர்ந்து நில் திட்டம்" ஊரக வாழ்வாதார இயக்கம்,நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஆதிதிராவிடம் மற்றும் பழங்குடியினர் என அனைத்துத் துறை தொழில் முனைவோர்களுக்கும் EDII நிறுவனத்தின் மூலம் தொழில் முனைவோர் விழிப்புணர்வும், திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. கழக அரசு பொறுப்பேற்ற 4 ½ ஆண்டு காலத்தில் இந்த திட்டங்களின் கீழ் 50 லட்சத்து 18 ஆயிரத்து 91 நபர்களுக்கு தொழில் முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் அரசு உதவி தொகையினை உயர்த்தி வழங்கி வருகிறது. புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புக்காக வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூ. 2 லட்சத்திலிருந்து ரூ. 3 லட்சமாகவும், அவற்றை தயாரித்து சந்தைப் படுத்த வழங்கப்படும் உதவித்தொகை ரூ. 5 லட்சத்திலிருந்து ரூ.7 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 4½ ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ்,572 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 14 கோடியே 50 லட்சம் உதவி தொகையாக வழங்கப்படுகிறது.

பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாணவ குழுக்களின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.25 ஆயிரம் முதல் ரூ. 1 லட்சம் வரை ரொக்க பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படுகிறது. கடந்த 4½ ஆண்டுகளாக செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தில் மாநில அளவில் வெற்றி பெற்ற 140 சிறந்த மாணவ குழுக்களுக்கு, ரூ.1 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியில் முன்னேறிய உலக நாடுகளில் உள்ளது போல கல்லூரி மாணவர்களையும், இளைஞர்களையும் தொழில் முனைவோர்களாக வளர்த்தெடுக்க 124 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் - Incubation Centres அமைக்கப்பட்டு உள்ளது.கடந்த 4 ½ ஆண்டுகளில் 39 Incubation Centres- தொழில் வளர் காப்பகங்களுக்கு, ரூ.21 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அரசின் தொழில் வளர் காப்பகங்களை பயன்படுத்தி 961 இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து தொழில்முனைவோர்களாக உருவாகி உள்ளனர். இளைஞர்களை ஊக்கப்படுத்தி தொழில்முனைவோர்களாக உருவாக்கிட, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க சான்றிதழ் படிப்பு கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. இதுவரை 23 தொழில் முனைவோர்கள் தங்களது ஓராண்டு சான்றிதழ் படிப்பினை முடித்து, புதிய தொழில்களை தொடங்கியுள்ளனர்.

தமிழ்நாட்டில் நகர, பேரூர், கிராமப்புற இளைஞர்களையும் தொழில் முனைவோர்களாக உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில், தொழில்முனைவோர் சான்றிதழ் படிப்பினை பயிலவருவோர் தங்கி பயில EDII நிறுவனத்தின் மூலம் தங்கும் விடுதியும் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனை தொழில்முனைய ஆர்வம் உள்ள இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இளைஞர்கள், மாணவர்கள் அரசு வழங்கும் நிதி உதவிகளை பெற்று புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி, உலக அரங்கில் தமிழ்நாட்டிற்கு நற்பெயரை ஏற்படுத்திடவும், முதல்வர் அவர்களின் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கினை அடைய துணை புரிய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்தார்.

விழாவில் MSME அரசு துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல் ஆனந்த், EDII சிட்கோ மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் கார்த்திக், தொழில் வணிக ஆணையர் நிர்மல்ராஜ், EDII இயக்குநர் அம்பலவாணன் கலந்துக் கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகரத்துக்கு உட்பட்ட அனகாபுத்தூர் பகுதியில் சாய் சீரடி ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் உணவு மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ், மாநில துணைச் செயலாளர் முனைவர் ஆர்.வரதன் ஆகியோர் உணவு வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மேற்கு பகுதியில் டித்வா புயல் காரணமாக தாம்பரம் மாநகரில் மழை பெய்து வரும் நிலையில்,5 வது மண்டலம் – 63,வது வட்டம் லட்சுமி நகரில் உள்ள தெருக்களில் மழைநீர் சூழ்ந்துள்ளதாகவும்,மின் கம்பிகள் தாழ்வாக இருப்பதாகவும், பொதுமக்கள் புகார் தெரிவித்ததையொட்டி தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., நேரில் சென்று பார்வையிட்டு மழை நீரை விரைந்து வெளியேற்றிட ஏதுவாக 62,வது வட்டத்தில் உள்ள அருள் நகரில் 96.50கோடி மதிப்பீட்டில் அமைக்கபட்டு வரும் கட்டன் கால்வாய் வழியாக மழைநீர் செல்ல இரும்புலியூர் ஏரி மதகை திறக்க அலுவலர்களை அறிவுறுத்தினார். மேலும் தாழ்வாக உள்ள மின் கம்பிகளை சீரமைத்திட மின் ஊழியர்களுக்கும் அறிவுறுத்தினார். உடன் 5,வது மண்டல குழு தலைவர்,மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன்,துணை செயலாளர் கி.வேல்மணி, மாமன்ற உறுப்பினர் பி.ஜோதிகுமார்,வட்ட செயலாளர்கள் பிரபகாரன் மற்றும் கழக நிர்வாகிகளும் உடனிருந்தனர்.

சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி முயல் நகர்

முழு நேர நியாய விலை கடை திறப்பு!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் நியாய விலை பொருட்களை வழங்கினார்!

சேலம்,டிச.4-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி முயல் நகர் முழு நேர நியாய விலை கடையினை இன்று (30.11.2025) திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி பொறுப்பில் இருக்கும்பொழுது தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தினை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு தங்குதடையின்றி தரமான நியாய விலை பொருட்கள் கிடைத்திட வழிவகை செய்தார்கள். தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு அனைத்து மக்களும் அணுகி பயன்பெறும் வகையில் இத்துறையில் கூடுதல் கவனத்துடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சேலம் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 1,298 முழுநேரம் மற்றும் 453 பகுதிநேரம் என மொத்தம் 1,751 நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுத்துறையின் கீழ் 1,739 நியாய விலைக்கடைகளும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக 12 நியாய விலைக்கடைகளும், மொத்தம் 1,751 நியாய விலைக்கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 11,11,149 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். கடந்த 4 ஆண்டுகளில் 120 முழுநேரம் மற்றும் 57 பகுதிநேரம் என மொத்தம் 177 நியாய விலைக் கடைகள் புதியதாக திறக்கப்பட்டு ள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள 470 நியாயவிலைக்கடைகளுக்கு ISO தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அனைத்து நியாய விலைக்கடைகளுக்கும் FSSAI தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அதேபோன்று 99 நகரும் நியாய விலைக் கடைகள் மூலம் 13,742 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் 1,284 பள்ளிகளுக்கு நியாய விலைக்கடைகள் மூலம் சேமியா, கோதுமை, ரவை மற்றும் அரிசிகள் வழங்கப்பட்டு உணவுகள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 1,10,265 குடும்ப அட்டைதாரர்கள் இல்லங்களுக்கே பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன்பெறுவோர் எண்ணிக்கையில் சேலம் மாவட்டம் மாநிலத்தில் முதலாவது இடத்தில் உள்ளது.

இன்றையதினம் நடைபெறும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, மாருதி நகர், முயல் நகர், காந்தி நகர், அசோக் நகர், ஐயப்பன் நகர், டெலிபோன் நகர் மற்றும் கௌரி நகர் சுற்று வட்டாரப் பகுதிகளில் வசித்து வரும் பொது மக்கள்/ குடும்ப அட்டைதாரர்கள் நலன் கருதி கொண்டப்பநாயக்கன்பட்டி முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து 713 குடும்ப அட்டைகளைப் பிரித்து முயல்நகர் என்ற புதிய முழு நேர நியாய விலைக் கடை செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 2,267 குடும்ப அட்டை உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் எப்பொழுதும் மாணவர்கள், பொது மக்கள், விவசாயிகள், நெசவாளர்கள் ஆகியோரின் நலனை கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாடு! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! கலாநிதி வீராசாமி எம்.பி. முன்னிலை!

திருவொற்றியூர் மத்தியப் பகுதியில் புதிய அலுவலகம் திறப்பு விழா !

துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி திறந்து வைத்தார்!

சென்னை,டிச.4-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்தியப் பகுதி சார்பில் பகுதிக்கழக புதிய அலுவலகம் காமராஜர் சாலையில் திறப்புவிழா மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கலாநிதி வீராசாமி எம்.பி, முன்னிலையில் திருவொற்றியூர் மத்தியப் பகுதி செயலாளரும், 2வது மண்டலக்குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் கழகத்தின் துணைச் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.ஆ.ராசா எம்.பி, புதிய கட்டிடத்தினை தனது பொற்கரங்களால் திறந்து வைத்து இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கினார்.

இதில் வட்டக்கழக செயலாளர்கள் வ.முத்துசாமி, மு.செல்வம், சாலை.டி.கணேசன், த.ச.கரிகாலச்சோழன், பகுதி நிர்வாகிகள் வி.ஜி.தினகரன், ஆர்.டி.ரமேஷ்குமார், துர்கா கோதண்டம், சஞ்சீவி ஸ்ரீதர், பி.செல்வராஜ் விஜயரங்கன், ஞானமூர்த்தி, என்.கிருஷ்ணமூர்த்தி, இளைஞரணி நிர்வாகிகள் மகேந்திரன், சுரேஷ், வட்டகழக, பகுதிக்கழக, மாவட்டக்கழக அணிகளின் நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி மற்றும் கழகத் தோழர்களும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

புனித தோமையார் மலை ஒன்றியத்தில் இளைஞரணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு திரிசூலத்தில் உள்ள மனநலம் குன்றியோர் இல்லத்தில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். ஐயப்பன் ஏற்பாட்டில் தலைமையில் ஒன்றிய செயலாளர் ஜி.கே. ரவி (எ) விவேகானந்தன் கலந்து கொண்டு அறுசுவை உணவு வழங்கினார் அப்பொழுது திரிசூலம் மாரிமுத்து மாவட்ட பிரதிநிதி மணல் செல்வம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.